**தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 193 – தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 295.52 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 283.96 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 11.56 மில்லியன் அதாவது 3.91 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 243.60 | 233.75 | 9.85 | 4.04 |
| மூலதனம் | 51.92 | 50.21 | 1.71 | 3.29 |
| மொத்தம் | 295.52 | 283.96 | 11.56 | 3.91 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 19301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 5.50 | 5.44 | 2.50 | 3.72 | 20.00 | 13.64 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பொது வைப்புக் கணக்குகளில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 14.46 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி (ரூபா மில்லியன்) |
|---|---|
| 6000/0000/00/0016/0095/000 | 0.09 |
| 6000/0000/00/0017/0026/000 | 14.32 |
| 6000/0000/00/0018/0098/000 | 0.05 |
| மொத்தம் | 14.46 |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

அமைச்சின் கீழுள்ள 12 பிரிவுகளுக்காக ரூபா 868,800 பெறுமதியான ஊழியர் சஞ்சிகையின் 4344 பிரதிகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவின் மூலம் அவை கிடைக்கப் பெற்றதாக உறுதிப்படுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு விலகல்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மூலதன மற்றும் 4 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 685,000 தொகையான மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 6 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் 6 மூலதன செலவின விடயங்களுக்காகவும் மிகை நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களின் தேறிய நிதிஏற்பாட்டில் 21 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

சேவைதருநரால் இடர்களுக்கு உட்படுகின்றவர்களுக்கு செலுத்துவதற்காக இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,324,578 தொகை 6 வருடங்கள் அளவிலான காலமாக கொடுப்பனவு செய்யப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 290,715 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 3 வருடங்கள் முதல் 5 வருடங்கள் வரையிலான கால வீச்சிலிருந்து இருந்து வந்த போதிலும் அக்கடன் மீதிகளை தீர்வுசெய்வதற்கு அமைச்சு மீளாய்வாண்டிலும் தவறியிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

#### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.4 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் சஞ்சிகை பௌதீக மெய்மையாய்வு**

2016 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் சஞ்சிகை பௌதீக மெய்மையாய்வின் போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 49,200 பெறுமதியான 358 சஞ்சிகைகளில் பற்றாக்குறையும் 2009 ஆம் ஆண்டின் போதும் 2013 ஆண்டின் போதும் ரூபா 5,600 கூட்டுப்பெறுமதியான 56 சஞ்சிகைகளில் மிகை கண்டறியப்பட்டது.

**(இ) ஏனைய நிறுவனங்களுங்குச் சொந்தமான சொத்துக்களை பயன்படுத்துதல்**

இரண்டு திணைங்களங்களுக்குரிய 3 மோட்டார் வாகனங்கள் முறைப்படி அமைச்சிற்கு கையேற்கப்படாமல் அமைச்சின் பொறுப்பில் காணப்பட்டன. அதில் ஒரு திணைக்களத்திற்குரிய வாகனமொன்று மீளாய்வாண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | | |
| | ரூபா | |
| (i) 2016 இன் 3 ஆம் இலக்க ஊழியர்கள் தேசிய ஆகக்குறைந்த சம்பளச் சட்டம் | - | அமைச்சு வளவில் சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இச்சட்டத்தின் பிரகாரம் ஆகக் குறைந்த சம்பளத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2016 இன் 4 ஆம் இலக்க ஊழியர்களின் பாதீட்டு சலுகை படிச் சட்டம் | - | அமைச்சு வளவில் சேவையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு இச்சட்டத்தின் பிரகாரம் வரவு செலவுத் திட்ட சலுகை படிகள் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2005 இன் 10 ஆம் இலக்க தொழிவாளர் இழப்பீட்டு திருத்த சட்டத்தின் 23(ஒ) பிரிவு | 110,000 | இழப்பீட்டு ஆணையாளரால் விண்ணப்பமொன்று தொடர்பாக சான்றுகள் கோரி விசாரிக்கப்பட்டதன் பின்னர் கட்டளையொன்றோ வழக்குத் தீர்ப்பொன்று மூலம் வழங்கப்படுகின்ற இழப்பீட்டுத் தொகை அக்கட்டளை அல்லது தீர்ப்புத் திகதியிலிருந்து மூலம் 30 நாட்களுக்குள் வலது குறைந்த தொழிலாளர் அல்லது இழப்பீட்டு |

ஆணையாளருக்கு செலுத்தியோ அல்லது வைப்புச் செய்ய வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத 02 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள்

---

நிதிப் பிரமாணங்கள் 1646 - அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களில் நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் என்பவற்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**3.8 முறையாக நிர்மாணிக்கப்படாத செயற்திட்டங்கள்**

---

அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை செயற்படுத்தல் 1954 பெப்ரவரி 12 ஆந் திகதிய 10640 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் கீழ் அம்பாறை அபய பூமியான கல்ஓயா வடகிழக்கு அபய பூமிக்குரிய காணியில் அமைச்சினால் 2015 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுலா விடுதியொன்று நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 469 ஆவது அதிகாரத்தின் கீழ் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்து மூல அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.3(i)(அ) வழிகாட்டலின் பிரகாரம் கொள்வனவு நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறைவேற்ற வேண்டிய ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை, சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீடு, சமூக தாக்கம் தொடர்பான மதிப்பீடு போன்றவை அமைச்சினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அந்நிர்மாணங்களுக்குரிய கட்டிடத் திட்டம் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அக்காணிப் பகுதியின் உரித்து தொடர்பாக அமைச்சு மற்றும் வளசீவராசிய திணைக்களத்திற்கு இடையே 2017 மார்ச் 23 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் காணியின் முழுமையான உரித்து வனசீவராசிகள் திணைக்களத்திடம் காணப்பட்டது. ஆதலால் அமைச்சிற்கு சட்டரீதியான உரித்தில்லாத வனாந்திரத்தில் அமைந்துள்ள காணியில் மேற்கொள்ளப்பட்டஇந்நிர்மாணத்திற்காக 2017 மே மாதம் இறுதி வரையிலும் ரூபா 16.3 மில்லியன் அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) செயற்திட்டத்தை ஆரம்பிக்கப்படாமல் கைவிடல்**

---

‘‘யுனிசி செயற்பணி’’ நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த பாதீடு மதிப்பீட்டு மூலம ரூபா 8,000,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2,000,000 இலங்கை சிறுவர் உழைப்பினை இல்லாமலாக்குதல் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்தின் கீழ் 08 புகையிரதப் பெட்டிகளில் அறிவித்தல்களை காட்சிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் திட்டமிடல் கட்டத்தின் போது உரிய சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளாமை மற்றும் முறையான கிரய நலன்கள் மதிப்பீடு

செய்யும் முறையொன்றுடன் திட்டம் தயாரிக்கப்படாமையால் இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவது சிக்கனமற்றதென தீர்மானிக்கப்பட்டு செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

**3.9 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரச சேவையை மிகவும் செயற்திறனாக மற்றும் பொது மக்களுக்கு சமீபமாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் விஷேடமாக அரச நடைமுறை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக 2014 நவம்பர் 30 ஆந் திகதிய SB/5/1//2/1 ஆம் இலக்க ஜனாதிபதி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சிற்காக இணையத்தளம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்காக இலத்திரனியல் அஞ்சல் முகவரியொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 20 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் தொழில்துறைசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்துடன் இணைந்து இலங்கையில் தொழில்துறைசார் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்காக தேசிய கொள்கையொன்றை செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொழில்துறை பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான புதிய சட்டமொன்றை நிறைவேற்றுவது குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.10 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தொழிலாளர் செயலக வளவில் நடாத்திச் செல்லப்படும் தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றிற்காக பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்குரிய உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்த கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வருகை பதிவேட்டில் போலியாக 16 உத்தியோகத்தர்களின் பெயர் உள்ளடக்கப்பட்டு மேற்படி 3 நிறுவனங்களுக்கும் எவ்வித சேவையொன்றையும் வழங்காமல் ரூபா 4,838,000 பாதுகாப்பு சேவை வழங்கிய நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

**3.11 முகாமைத்துவ நலிவுகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 15 நீதிமன்ற அதிகாரப் பிரதேசங்களில் 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் தொடரப்பட்ட வழக்குகளில் தற்போது விசாரிக்கப்பட்டு வரும் 153 கோர விபத்து வழக்குகள் மற்றும் கோர விபத்தில்லாத 380 வழக்குகளும் 08 மாதங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலப்பகுதி முதல் விசாரிக்கப்பட்டு வந்தன. வழக்கு தாமதத்தின் பேரில் முறைப்பாட்டு தரப்பினருக்கு உரித்தான இழப்பீட்டு தொகையின் தற்போதைய பெறுமதி குறைவடைவது இடம்பெறுவதுடன், சட்டங்கள் மற்றும் ஏனைய செலவினம் கூடுதலாக இருப்பதன் பேரில் இழப்பீட்டுத் தொகையிலிருந்து முறையான நலன்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் சர்ச்சைக்குரியதாகக் காணப்பட்டது.

(ஆ) அனர்த்தங்களுக்கு உட்படும் ஊழியர்களுக்காக இழப்பீட்டினை வழங்குதல் 2005 இன் 10 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீடு (திருத்த) சட்டத்தின் iv ஆம்

பட்டோலையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திருத்தங்கள் மேற்கொண்டு 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், தற்போது காணப்படும் சம்பள மட்டம் மற்றும் விலை மட்டம் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு இழப்பீட்டுத் தொகையை திருத்தம் செய்வது தொடர்பில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வயது பூர்த்தியடைந்திருந்த 427 நலனாளிகளுக்குரிய ரூபா 8,059,437 ஆன சேமிப்பு வைப்பு புத்தகங்கள் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் காணப்பட்ட போதிலும் அவற்றை விடுவிப்பதன் காலதாமதம் 1 வருடம் முதல் 30 வருடங்கள் வரையாக இருந்தன. அவ்வாறே அந்த எஞ்சிய சேமிப்பு வைப்பு புத்தகங்களுக்கு வட்டியை சேர்ப்பதற்கான உரிய வங்கி புத்தகங்களை சமர்ப்பிக்காமையினால் அதற்குரிய வட்டித்தொகையும் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) அமைச்சிற்குரிய மோட்டார் வாகனமொன்று விபத்திற்குட்பட்டிருந்ததுடன் வண்டியை திருத்தம் செய்வதற்கு பாரிய செலவினமொன்று செய்ய வேண்டியிருப்பதாலும் அவ்வண்டி 12 ஆண்டுகளுக்கு மேல் பழமையாக இருந்தமையாலும் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்த ரூபா 1,200,000 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 3.12 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 13 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 71 | 52 | 19 |
| (iv) | ஆரம்ப நிலை | 31 | 29 | 02 |
| | மொத்தம் | 122 | 99 | 23 |

### (ஆ) முறையற்ற வகையில் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 2.5.1 ஆம் பிரிவிற்கு முரணாக 04 உத்தியோகத்தர்கள் 2013 ஆம் ஆண்டு முதல் அமைச்சினால் வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர் மீளாய்வாண்டின் போது இவ்விடுவிக்கப்பட்ட மனித வளங்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 660,808 செலவிடப்பட்டிருந்தது.